படப்பை ஆ. மனோகரன் தலைமை! ஏ.வந்தேமாதரம் வரவேற்புரை! காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மருத்துவ அணி

துணை அமைப்பாளர் தா.அன்பழகன் - சின்னம்மாள் பானு இல்லத் திறப்பு விழா!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் - கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. திறந்து வைக்கின்றனர்!

காஞ்சிபுரம், ஜன. 30 - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர் ஒன்றியக்குழு உறுப்பினர் தா.அன்பழகன் சின்னம் மாள் பானு இல்லத் திறப்பு விழா நாளை (31.1.2025 - வெள்ளிக்கிழமை) காலை 7.30 மணியளவில் கோவூர் கிழக்கு மாட வீதியில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார்.

குன்றத்தூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.வந்தே மாதரம் வரவேற்புரை யாற்றுகிறார்.

ப.சுதாகர், பா.குமரவேல், அ.கண்ணதாசன், பா.ராஜேந்திரன், ஆ.செல்வராஜ், தமிழரசி, சுரேஷ், பா.கு.தமிழ்வாணன், வே.வசந்தகுமார், ஜோஸ்பின், கிளாரா, குமரவேலு, கே.இ.சீனிவாசன், உஷா, வெற்றிவேல், ஆர்.பழனி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இப்புதிய இல்லத்தை குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக மருத்துவ அணி செயலாளர் நா.எழிலன் எம்.எல்.ஏ., மருத்துவர் என்.எஸ். கனிமொழி சோமு எம்.பி., ஆகியோர் திறந்து வைத்து சிறப்பிக்கின்றனர்.

இவ்விழாவில் சரஸ்வதி மனோகரன், உமா மகேஸ்வரி வந்தேமாதரம், கோ.சத்தியமூர்த்தி, பட்டூர் எஸ்.ஜபருல்லா, கே.எத்திராஜ், எம்.ஆர்.சீனிவாசன், வி.ஹரி, டி.பி.செந்தில்குமார், கிருத்திகா தேவி, பி.ஆகாஷ், சபரி ராஜா, ராஜேஷ், அரவிந்தராஜ், து.சுந்தர், கே.வசீகரன், பொன் ஜீவா, பூங்கொடி அரசு, எஸ்.ராஜா தேசிங்கு, எஸ்.சந்தானம், எஸ்.எஸ். கே.துளசிங்கம், பா.ராஜேந்திரன், மு.சுப்பிரமணி, வா.நந்தகோபால், ஏ.மணி, வாசுகி, மகேஷ், வி.ஹரி, மு.ராஜேந்திரன், பா.பரிமேலழகன், தி.க.பாஸ்கரன், டி.எஸ்.எம்.ஜெயகரன், டி.ஆர்.சாரதி, பெரிய நாயகம், சையது சுலைமான், பொன் ரமேஷ் கவி, சங்கீதா வேலு, எஸ்.கர்ணன், ஏழுமலை, லட்சுமி ஞானசேகர், ச.பால கிருஷ்ணன், ராயப்பா, மலர்விழி, தமிழமுதன், தினேஷ், ரேவதி, சத்தியமூர்த்தி, கோதண்டராமன்,

ஜனார்த்தனன், அறிவொளி, நவீன் ராஜ், தீபக் ராஜ், கவி பாரதி, மா.சு.பிரகாஷ், இ. கதிரவன், காப்ப ஆடலரசு, கு.பிரவீன் குமார், எஸ்.சுதாகர்பிரபு, மகேஷ்குமார், ஹரிபாபு, நாராயணன், ஜமீர், இரா. குமரவேல், சே.பார்த்திபன், ஆர். சையத், இளைய பாரதி, இ.பாலாஜி, காமாட்சி பாலு, அமுதப்பிரியா, மகாலட்சுமி எட்டியப்பன், மல்லிகா நடராஜன், சோபா ரங்கநாதன், லோகநாயகி சாமிநாதன், உஷா நந்தினி, எத்திராஜ், சி.பாண்டியன், கே.சுதாகரன், அன்னம் மாள் மோகன், ஜமிலா பாண்டுரங்கன், கௌரி தாமோதரன், திவ்யா சத்தியநாதன், உமா சத்தியமூர்த்தி, எஸ்.பாண்டியன், கே.அரசு, சாந்தாதேவி, சுகுமார், வி.அன்பு, க.அன்பழகன், லட்சாவதி கருணாகரன், மலர்விழி முருகன், குமுதா சுமன், ராஜலட்சுமி ராஜி, மு.செல்வமணி, தே.அரிகிருஷ்ணன், சுமதி வைத்தீஸ்வரன், ஷீலா தனசேகரன், கோதநாயகி வரதன், மீனா மோகன், ஆரிக்கம் ஜெயபால், வி.சுதாகர், சாவித்திரி சந்திரன், தா.தமிழமுதன், வள்ளி சுந்தர், வித்யா ரஞ்சித்குமார், வசந்தி சாம்பசிவம், ஆர்.ராஜன் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

விழாவிற்கு வருகை தரும் அனைவரையும் தாந்தோணி, தா.மணி மேகலை, அ.கனிஷ்கர், ஐ.மித்யூஷ்கர், அன்பழகன், மைவிழி அன்பழகன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தலைமையில் ஃபெஞ்சல் புயல் தொடர்பாக பேரிடருக்கு பிந்தைய நிரந்தர சீரமைப்புக்கான மதிப்பீடு குறித்து ஆய்வு (Post Disaster Needs Assessment) மேற்கொள்ள அமைக்கப்பட்டுள்ள குழுவுடன் ஆலோசனைக் கூட்டம் 27.01.2025 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, பேரிடர் மேலாண்மை இயக்குநர் மோகனச் சந்திரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேரிடருக்கு பிந்தைய

நிரந்தர சீரமைப்பு பணிக்கான சேத மதிப்பீட்டு குழுவுடன் ஆலோசனைக் கூட்டம்!

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜன 30 - பேரிடருக்கு பிந்தைய நிரந்தர சீரமைப்பு பணிக்கான சேத மதிப்பீடு குழுவுடன் (Post Disaster Needs Assessment) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

ஃபெஞ்சல் புயலின் காரணமாக சேதத்திற்குள்ளான கட்டமைப்புகளை நிரந்தரமாக சீரமைக்க, பேரிடருக்கு பிந்தைய சேத மதிப்பீடு குறித்த ஆய்வை மேற்கொள்ள தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட 13 வல்லுநர்களையும், தமிழ்நாடு அரசின் பல்துறை அலுவலர்களைக் கொண்டும் அரசு ஆணை எண்.31, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 21.01.2025ன் படி ஒரு குழு அமைக்கப்பட்டது. 22.01.2025 அன்று சென்னை வந்த இந்த வல்லுநர் குழு, தமிழ்நாடு அரசின் பல்துறை அலுவலர்களுக்கு 23.01.2025 அன்று பேரிடருக்கு பிந்தைய சேத மதிப்பீடு ஆய்வை மேற்கொள்வது குறித்து பயிற்சி அளித்தது.

பின்னர் இக்குழு 24.01.2025 முதல் 26.01.2025 முடிய விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் ஃபெஞ்சல் புயலின் காரணமாக ஏற்பட்ட சேதங்களை நிரந்தரமாக சீரமைக்கும் நோக்கில் நேரில் சென்று மதிப்பீடு செய்தது.

ஏற்கெனவே, ஃபெஞ்சல் புயலின் காரணமாக ஏற்பட்ட தற்காலிக சேதங்களை மதிப்பீடு செய்ய ஒன்றிய அரசின் பல்துறை குழுவானது கடந்த டிசம்பர் மாதம் ஆய்வை மேற்கொண்டது. ஃபெஞ்சல் புயலின் காரணமாக ஏற்பட்ட சேதங்களை தற்காலிகமாக சீரமைக்கவும், நிவாரணம் வழங்கவும் ரூ.3104 கோடியும், நிரந்தர சீரமைப்புப் பணிகளுக்கு ரூ.3681 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசால் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

27.01.2025 அன்று, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், பேரிடருக்கு பிந்தைய நிரந்தர சீரமைப்பு பணிக்கான சேத மதிப்பீடு குழுவுடன் (Post Disaster Needs Assessment) சென்னை, எழிலகத்தில் கலந்தாலோசித்தார்.

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட 13 வல்லுநர்களையும், தமிழ்நாடு அரசின் பல்துறை அலுவலர்களையும் PDNA அறிக்கையினை விரைந்து சமர்ப்பிக்க கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு அரசு, இந்த அறிக்கையினை ஒன்றிய அரசுக்கு சமர்ப்பிப்பதன் மூலம் புயலால் ஏற்பட்ட சேதங்களை நிரந்தரமாக சீரமைக்க தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறவும், இதன் மூலம் பேரிடரினால் சேதமடைந்துள்ள பல்வேறு உட்கட்டமைப்புகளை தற்காலிக தொழில் நுட்பங்களை உட்படுத்தி சிறந்த முறையில் மீட்டுருவாக்கம் (Build Back Better) செய்ய வாய்ப்புள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தின் போது, கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, பேரிடர் மேலாண்மை இயக்குநர், வ.மோகனச்சந்திரன் மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

படப்பை ஆ.மனோகரன் தலைமை! குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொருளாளர்

சி.பார்த்தசாரதி - செல்வி பார்த்தசாரதி இல்ல மணவிழா!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் - டி.ஆர்.பாலு எம்.பி. வாழ்த்துகின்றனர்!

காஞ்சிபுரம், ஜன. 30 - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொருளாளர், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சி.பார்த்தசாரதி செல்வி பார்த்தசாரதி ஆகியோரின் புதல்வர் பா.தமிழரசனுக்கும் செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், நெடுங்குன்றம் அ.மணி - சத்யா ஆகியோரின் புதல்வி டி.ஸ்வேதாணவுக்கும் மணவிழா நாளை (31.1.2025 - வெள்ளிக்கிழமை) காலை 9 மணியளவில், படப்பை, சாலமங்கலம் கூட்டுரோடு, தில்லை மஹாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர், குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார். சி.பார்த்தசாரதி வரவேற்புரையாற்றுகிறார்.

மு.சுப்பிரமணி, நந்தகோபால், மணி, வாசுகி மகேஷ், வி.ஹரி, மு.ராஜேந்திரன், மா.ப. பரிமேலழகன், தூ.சுந்தர், பொன் ஜீவா, கே.வசீகரன், பூங்கொடி அரசு, எஸ்.சந்தானம், எஸ்.ராஜா தேசிங்கு, க.துளசிங்கம், பா.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மணவிழாவை சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

இம்மணவிழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., கா.செல்வம் எம்.பி., செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., து.மூர்த்தி, சரஸ்வதி மனோகரன், ஏ.வந்தேமாதரம், உதயா கருணாகரன், லோகநாதன், எஸ்.சேகர், பி. சந்தானம், ஜே.சண்முகம், கோ.சத்தியமூர்த்தி, பட்டூர் எஸ்.ஜபருல்லா, எம்.கே டி. கார்த்திக், உமா மகேஸ்வரி வந்தேமாதரம், ந.பாலகிருஷ்ணன், சங்கீதா வேலு, பொன் ரமேஷ் கவி, எஸ்.கர்ணன், மலர்விழி தமிழமுதன், தா.கு.ஏழுமலை, லட்சுமி ஞானசேகர், கோதண்டராமன், எஸ்.இளங்கோ, தி.கா.பாஸ்கரன், டி.எஸ்.எம். ஜெயகரன், ஆர்.சாரதி, பெரியநாயகம், பா.குமரவேல், தா.அன்பழகன், தமிழரசி சுரேஷ், சையதுலைமான், அமுதா செல்வம், பா.அறிவொளி, லோ.சுதாகர், தீபக்ராஜ், மா.சு.பிரகாஷ், பா.ஆடலரசு, எஸ். ஜனார்த்தனன், அரிபாபு, வசந்தகுமார், நாராயணன், கதிரவன், மகாலட்சுமி எட்டியப்பன், மல்லிகா நடராஜன், சோபா ரகுநாதன், அமுதா சத்தியபிரியா, காமாட்சி பாலு, ஜோஸ்பின், கிளாரா, பரசுராமன், அசோக்குமார், பஞ்சாட்சரம், வேல்முருகன், ரஞ்சித் குமார், சந்திரசேகர், மு.குமார், வீரபாண்டியன், தமிழ் தாஸ், தமிழ்தாசன், யுவராணி, மலர்விழி தமிழமுதன், லட்சாவதி கருணாகரன், க. அன்பழகன், ராஜலட்சுமி ராஜி, சி.பாண்டியன், கே.சுதாகரன், லோகநாயகி சாமிநாதன், உஷா நந்தினி எத்திராஜ், தா.அன்பழகன், அண்ணம்மாள், மோகன், செல்வமணி, மு.செல்வ மணி, கே.அரிகிருஷ்ணன், உமா சத்தியமூர்த்தி, சுமதி வைத்தீஸ்வரன், ஷீலா தனசேகரன், லோகநாயகி வரதன், மீனா மோகன், ஆரிக்கம் ஜெயபால், வி.சுதாகர், சாவித்திரி சந்திரன், தமிழமுதன், வள்ளி சுந்தர், வித்யா ரஞ்சித், குமார், ராமன், ப.சுதாகர், பாண்டியன், ஜமீலா, பாண்டுரங்கன், திவ்யா சத்தியநாதன், அரசு, சாந்தாதேவி சுகுமார், கௌரி தாமோதரன், ஐயப்பன் உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர்.

மணவிழாவிற்கு வருகை தரும் அனைவரையும் செல்வி பார்த்தசாரதி, சி.பிரபாகரன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் - திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிவிப்பு!

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.கழக ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 05.02.2025 அன்று புதன் கிழமை காலை 11 மணிக்கு திருவள்ளூர் ஆயில் மில் அருகில் உள்ள ஐ.ஆர்.என். திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத்தலைவர் கே. திராவிடபக்தன் தலைமையிலும், கழக கொள்கை பரப்பு செயலாளர் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், தலைமை செயற்குழு உறுப்பினரும் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையிலும் , நடைபெற உள்ளது

அதுசமயம் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி. கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர். டி.இ.ஆதிசேசன், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், மாநில தொண்டர் அணி துணைச் செயலாளர் மாஸ்டர் குருதாஸ் மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர் வி.சி.ஆர்.குமரன். சி.ஜெயபாரதி. பா.உதயமலர் பாண்டியன், எம்.மிதுன் சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு எஸ்.கே. ஆதாம். வி.கிஷோர். மு.சுப்பிரமணியம். பி.இராஜேஸ்வரி இரவிந்திரநாத் ஆகியோர் கலந்துக் கொள்கின்றனர் முன்னதாக நகர கழக செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் வரவேற்பு அளிக்கிறார். மேற்படி கூட்டத்திற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: மார்ச் 01 தேதி முதல் தமிழ்நாட்டின் முதலமைச்சர் கழக தலைவர் வெற்றி நாயகன் தளபதி அவர்களின் பிறந்த நாள் விழா தொடர் நிகழ்ச்சிகள் கொண்டாடுவது குறித்து

திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ.,
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி இராபின்சன் விளையாட்டு மைதானத்தில் கட்டப்பட்டு வரும் கால் பந்து மற்றும் கூடை பந்து விளையாடுவதற்கான ஆடுகள மைதானத்தை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி ஆய்வு மேற்கொண்டார். அதுபோது இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் வட்ட செயலாளர் பி.கண்ணன் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் பிரபு தாஸ், ஏ.இ. நவீன் ஆகியோர் உடனிருந்தனர்.

ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ - க.தனசேகரன் எம்.சி - மு.ராசா எம்.சி. முன்னிலை!

கலைஞர்நகர் 127வது வட்டக் கழக நிர்வாகிகள் - பாக முகவர்கள் கூட்டம்!

வட்டச் செயலாளர் பொன்.லோகு எம்.சி. அறிக்கை! வே.உமாகாந்த் ஆய்வு செய்கிறார்!

சென்னை, ஜன. 30 - கலைஞர் நகர் வடக்குப் பகுதி, 127 வது வட்டக் கழகச் செயலாளர் பொன்.லோகு எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் வடக்குப் பகுதி, 127 வது வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் (1,15,17, 18, 29, 30, 32) ஆய்வுக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, இன்று (30.1.2025 - வியாழக்கிழமை) மாலை 6 மணியளவில், கோயம்பேடு, சேமாத்தம்மன் நகர், 1 வது செக்டர், சமூக நலக் கூடத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் 127 வது வட்டக் கழகச் செயலாளரும், மாமன்ற உறுப்பினர் பொன்.லோகு தலைமை வகிக்கிறார்.

கூட்டத்தில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர், பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கு மற்றும் தணிக்கைக் குழுத் தலைவர் க. தனசேகரன் எம்.சி, கலைஞர் நகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மு. ராசா எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். விருகம்பாக்கம் தொகுதிப் பார்வையாளர் வே.உமா காந்த் ஆய்வு மேற்கொள்கிறார்.

இக்கூட்டத்திற்கு பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் திரளாக கலந்து கொள்ளுமாறு வட்டக் கழகப் பொறுப்பாளர் பொன்.லோகு எம்.சி. கேட்டுக் கொண்டுள்ளார்.

துணை மேயர் மகேஷ்குமார் - காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

வளசரவாக்கம் மண்டலத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பில் புதிய விளையாட்டுத் திடல்!

மேயர் ஆர்.பிரியா திறந்து வைத்தார்!

சென்னை, ஜன.30- பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் மண்டலம், வார்டு-145க்குட்பட்ட நெற்குன்றம், பெருமாள் கோவில் தெருவில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள நடைபாதையுடன் கூடிய புதிய விளையாட்டுத் திடலினை மேயர் ஆர்.பிரியா நேற்று (29.01.2025) பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

வளசரவாக்கம் மண்டலம், வார்டு-145, நெற்குன்றம், பெருமாள் கோயில் தெருவில் 1572.56 ச.மீ. பரப்பளவு கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலத்தில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பில் நடைபாதையுடன் புதிய விளையாட்டுத் திடல் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டுத் திடலில் சுற்றுச்சுவர், நடைபாதை, கழிவறை, திறந்தவெளி உடற்பயிற்சி உபகரணங்கள், குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், கபடி மைதானம் மற்றும் மின்வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விளையாட்டுத்திடல் மூலமாக நெற்குன்றம் பகுதியில் உள்ள பல்லவன் நகர், மாதா கோயில் தெரு, பெருமாள் கோயில் தெரு, கிருஷ்ணா நகர், சக்தி நகர் மற்றும் அழகம்மாள் நகர் ஆகிய பகுதிகளைச் சார்ந்த மக்கள் பயன்பெறுவர்.

இந்நிகழ்ச்சியில், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் க. கணபதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம். பி.அமித், இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே. ராஜன், மாமன்ற உறுப்பினர்கள் த. சத்தியநாதன், வி.கிரிதரன், திருமதி சாந்தி ராமலிங்கம், ஏ.ஸ்டாலின், திருமதி ர.செல்வி ரமேஷ், திருமதி மா. ரமணி மாதவன், மண்டல அலுவலர் கே. உமாபதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணலி அரசு மேல்நிலைப் பள்ளியில் பள்ளி தலைமை ஆசிரியர் திலக் தலைமையில் நடைபெற்ற இந்திய திருநாட்டின் 76 ஆம் ஆண்டு குடியரசு தின விழாவில் மாநில மீனவரணி துணைத்தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் கலந்து கொண்டு தேசியக் கொடி ஏற்றினார். மேலும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரையாண்டு தேர்வில் பள்ளியில் நன்கு படித்த முதல் மூன்று இடங்களைப் படித்த மாணவ – மாணவியர்களுக்கு வாழ்த்துக் கூறி சிறப்புப் பரிசு வழங்கினார். இதில் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் எம்.எஸ்.நாகலிங்கம், ராமச்சந்திரன், எம்.எஸ்.ரவி, கலை சரவணன், சுமித்ரா, வி.குமார், மாரியப்பன், எழில், கவிஞர் ராஜசேகர், சாலை சுரேஷ், ஆனந்தி, எம்.சுரேஷ், ஜி.சுரேஷ், கார்த்திக், அண்ணாதுரை, வேதா மோகன்ராஜ், பலராமன், தயாளன், மனோகரன், குலசேகரன், இளையராஜா, மோகன், ரவி, ஆட்டோ ராஜா, முரளி, கார்த்திக் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.